பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 15 செவ்வாய்க்கிழமை (31.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103

# யாழ்.குடாநாடு முழுவதும் தொடர்ந்து முடக்கம்

## மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு தொடர்ந்து அமுல்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் பரவும் அபாயம் காரணமாக யாழ்ப்பாணம் தொடர்ந்து முடக்கப்படுகின்றது. தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் 02

# ஊரடங்கில் நடமாடிய 7 ஆயிரத்து 98 பேர் கைது

## ஆயிரத்து 702 வாகனங்கள் தடுப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதும் ஊரடங்கு வேளையில் வீதிகளில் நடமாடிய 7 ஆயிரத்து 98 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், ஆயிரத்து 702 வாகனங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் அறிவித்துள் 02

**021 221 7982**
**021 222 6666**

வடக்கில் கொரோனா தொடர்பான புதிய அழைப்பு எண்கள் 02

# 122

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் மேலும் ஐவர் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுத் திணைக்களத்தின் 02

இருமலே இருந்தது

## கொரோனா என்று எமக்குத் தெரியாது

மரணமானவரின் உறவுகள்

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் நேற்று உயிரிழந்தவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை யாரும் அறிந்திருக்கவில்லையென அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அவர் தொற்றுக்குள்ளாகும் விதத்தில் வெளியில் நடமாடியவருமல்ல என் 02

## யாழைச் சேர்ந்த நீர்கொழும்பு வாசி

# கொரோனாவால் நேற்று மரணம்

- கொரோனாவை மறைத்து சிகிச்சை பெற முயன்றவரே உயிரிழப்பு
- 50 மருத்துவ சேவையாளர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
- உயிரிழந்தவர் கடந்த மார்ச் 11ஆம் திகதி யாழுக்கு வருகை தந்து திரும்பியுள்ளார்
- இலங்கையில் தீவிரமடையும் கொரோனா

02

கொரோனா வைரஸ் சந்தேகம்

# பொலிஸார் உட்பட 7 பேர் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் உட்பட 7 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள கொரோனா சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் 02

4 மாத குழந்தை உட்பட

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு சிலாபத்தில் கொரோனா

(கொழும்பு)

சிலாபம், நாத்தாண்டியா பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களிடம் நேற்று முன்தினம் கொரோனா தொற்று தொடர்பான 02

# களுபோவில போதனாவில் விடுதி ஒன்று மூடப்பட்டுள்ளது

## பணியாளர்கள் நோயாளிகள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்

(கொழும்பு)

களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவருக்கு கொரோனா 02

கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# கோட்டா அரசின் நிவாரணங்கள்



(கொழும்பு)

கொரோனாவல் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான நிவாரணங்கள் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் நேற்று வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிவாரணங்கள் மற்றும் அவற்றை பெற்றுக் கொள்வதற்கு தகைமையுள்ளவர்கள் கீழ்வருமாறு, 02

## 122...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 122ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

அவர்களில் 11 பேர் முழுமையாகச் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நாட்டில் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 114 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்படுகின்றனர். (ம-3)

## ஊரடங்கில் நட...

ளனர்.

நாடுமுழுவதும் தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 19 மாவட்டங்களில் மட்டும் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை தற்காலிகமாக தளர்த்தப்படுகிறது.

இந்த நிலையில் ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸாரும் இராணுவத்தினரும் வீதிக் காவல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஊரடங்குச் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 11 நாட்களில் 7 ஆயிரத்து 98 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர். அத்துடன், ஆயிரத்து 702 வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம-3)

## பொலிஸார் உட்...

த.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலையில் உள்ள கொரோனா பரிசோதனைக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேலும் நேற்று திங்கட்கிழமை கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட தாவடிப் பகுதியினைச் சேர்ந்தவரின் வீட்டிற்கு 300 மீற்றர் தூரத்தில் உள்ள வீட்டில் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் குறித்த வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நெடுந்தீவிற்கு வெளிநாட்டவர் ஒருவருடன் சென்று வந்த ஆனைக்கோட்டைப் பகுதியினைச் சேர்ந்த நபர் ஒருவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கான சந்தேகத்துடன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேலும் உரும்பிராய் பகுதியினைச் சேர்ந்த பழ வியாபாரி ஒருவரும் மன்னார் மாவட்டத்தில் இருந்து இருவரும் நேற்று முன்தினம் மாலை கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளமையால் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சிறப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காய்ச்சல் காரணமாக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று திங்கட்கிழமை நண்பகல் அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் பரிசோதனைக்காக கொரோனா சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-3,10)

## ஒரே குடும்பத்தை...

சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே அவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐந்து பேர் கொண்ட இக் குடும்பத்தில் நான்கு மாத குழந்தையொன்றும் உள்ளடங்குவதாக சுகாதார துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில் இலங்கையில் இதுவரை 122 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ்.குடாநாடு...

அமுலில் இருக்கும்.

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் ஏப்ரல் 01, புதன் காலை 6.00 மணி வரை அமுலில் இருக்கும்.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாக பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளை துஷ்பிர யோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு உதவும் நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே என்பதால் அந்த நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பொறுப்புடன் பின்பற்றுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் அடுளுகம தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எவரும் இந்த கிராமத்துக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ மறு அறிவித்தல் வரை முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனாவால்...

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இரண்டாவது நபர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, கொழும்பு IDH வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 64 வயதுடையவர் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்த இரண்டாவது நபர் இவராவார்.

மேலும் 6 பேர் ஆபத்தான நிலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த நீர்கொழும்பு வாசி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த 64 வயதுடையவர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியதால் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு நேற்று மாற்றப்பட்டார்.

அவர் இருதய நோயாளி என்பதுடன் சுவாசக் கோளாறு காரணமாக சிகிச்சை பெற்று வந்தவர் என்று சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் உயிரிழந்த நோயாளியின் விவரங்களை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சேகரித்துள்ளது.

"உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். எனினும் அவர் நீண்டகாலமாக நீர்கொழும்பு கொச்சிக்கடையில் வசித்து வந்தார். அத்துடன், அவர் கடந்த மார்ச் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து திரும்பியுள்ளார்.

அவரது மகன்கள் இருவரும் வியாபார நோக்கங்களுக்காக கடந்த பெப்ரவரியில் இந்தியா சென்று நாடு திரும்பியுள்ளனர்.

உயிரிழந்த நோயாளி நீர்கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படாமலேயே நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு நேற்று மாற்றப்பட்டார்.

எனினும் அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருந்ததால் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்தார். அவரது மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது" என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவருக்கு கொரோனா தொற்று இருந்தமையால் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் பணியாற்றும் 50 மருத்துவ சேவையாளர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## 021 221 7982...

கொரோனா தொற்றுநோய் தொடர்பான விபரங்கள் மற்றும் அறிவித்தல்களுக்காக வடக்கு மாகாணத்தில் 24 மணி நேர உதவி அழைப்பெண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், 021-2217982 மற்றும் 021-2226666 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் கொரோனா தொற்று நோயினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில், இவை தொடர்பாக சுகாதார ரீதியில் பொதுமக்கள் தமக்குத் தேவையான ஆலோசனைகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் செயற்படும் வண்ணம் உதவி அழைப்பெண் சேவையானது நேற்று திங்கட்கிழமை முதல் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கோட்டா அரசின்...

1. முதியோருக்கான கொடுப்பனவு பெறும் 416764 பேருக்கும் முதியவர்களாக இனம் காணப்பட்ட, ஆவணப்படுத்தப்பட்டுள்ள 142 345 பேருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு வழங்கப்படும்.
2. அங்கவீனர்களுக்கான கொடுப்பனவு பெறும் 84071 பேருக்கும் அங்கவீனர்கள் என அடையாளம் காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டுள்ள 35229 பேருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு உரித்தாகும்.
3. விவசாய காப்புறுதி முறைமையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள 160675 விவசாயிகளுக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு உரித்தாகும்.
4. சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு பெறும் 25320 பேருக்கும் மேலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள 13850 பேருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு வழங்கப்படும்.
5. கர்ப்பிணி தாய்மார் மற்றும் மந்த போசனையுடைய பிள்ளைகளுக்கான திரிபோஷ மற்றும் வேறு போசனை பொருட்கள் வீடுகளுக்கு நேரடியாக வழங்கப்படும்.
6. சமுர்த்தி கொடுப்பனவு பெறும் 1798655 பேருக்கும் மேலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள 600339 குடும்பங்களுக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி அதிகார சபையின் ஊடாக வழங்கப்படும்.
7. ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் 645179 பேருக்கு ஓய்வூதிய சம்பளம் வழங்கப்படும்.
8. 1500000 அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திலிருந்து கடன் தொகை அறவிடப்படுவது மீண்டும் அறிவிக்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.
9. முச்சக்கரவண்டிகள், ட்ரக் வண்டிகள், பாடசாலை பஸ் மற்றும் வான்கள் மற்றும் சுயதொழிலுக்காக பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் உரிமையாளர்கள் உள்ளிட்ட சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள 1500000 பேருக்கு வரி தவணைக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
10. உருவாகியுள்ள நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதார அசௌகரியங்கள் காரணமாக ஊழியர்களுக்கான சம்பளம் வழங்க முடியாத தனியார் வர்த்தகங்களுக்கும்நிவாரணங்கள் உரித்தாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## களுபோவில...

தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மொறட்டுவ பகுதியை சேர்ந்த 60 வயதான ஒருவரே தொற்றிற்கு உள்ளாகியுள்ளார். வைத்தியசாலையின் 5வது விடுதியில் அவர் சிகிச்சை பெற்று வந்திருந்தார்.

அவருக்கு கொரோனா உறுதியானதை யடுத்து, வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினரும் அந்த விடுதியில் சிகிச்சை பெற்றவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் 5ம் இலக்க விடுதி மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் மஹரகம ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த விடுதி நோயாளர்கள் ஹோமாகம வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## கொரோனா என்று...

றும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் இரண்டாவது கொரோனா தொற்று உயிரிழப்பு நேற்று பதிவாகியது.

முஹம்மத் ஜமால் என்பவரே உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட இவர், நீர்கொழும்பு பலகத்துறை பகுதியில் வசித்து வந்தார்.

அவருக்கு ஏற்பட்ட கொரோனா தொற்றை அவர் மறைத்தார் என வெளியான செய்தியை குடும்பத்தினர் மறுத்துள்ளனர். அவருக்கு கொரோனா தொற்று இருந்ததை நேற்றுதான் குடும்பத்தினரே அறிந்து கொண்டதாக தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக சளி, இருமல், காய்ச்சல், ஆஸ்மா என சிரமப்பட்டு வந்துள்ளார். தொடர்ந்து இந்த வருத்தங்களால் அவர் சிரமப்பட்டு வருவதால், அண்மையில் ஏற்பட்ட சளி, இருமலையும் குடும்பத்தினர் பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அவர் தொடர்ந்து நோயாளியாகவே இருந்ததால், வீட்டிலேயே இருந்தார். வெளியே செல்வதில்லை. சந்தைக்கு மீன் வாங்க சென்று வந்தார்.

அவருக்கு எப்படி கொரோனா தொற்று ஏற்பட்டதென்பதை தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. சந்தைக்கு சென்று வந்த சமயத்தில் தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து சுகாதார அதிகாரிகளும் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் அவர் ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும், அவரது உடல்நிலை சீரடையாததையடுத்து, உறவினர்களால் நேற்று நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது தெரிய வந்தது. உடனடியாக அவர் தனிமைப்படுத்தப்பட்டு, கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும், அவரது உடல்நிலை மோசமடைந்ததால் அது முடியவில்லை. நீர்கொழும்பு வைத்தியசாலையிலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

# ஷேன் வோர்ன் மனதில் சச்சின்

"தனது கால கட்டத்தில் விளையாடிய வீரர்களின் சச்சின், லாரா தான் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள்," என, அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் ஷேன் வோர்ன் கணித்துள்ளார்.

அவுஸ்திரேலிய முன்னாள் 'சுழல்' வீரர் ஷேன் வோர்ன் (வயது-50), இவர் 'இன்ஸ்டாகிராம்' சமூக வலைதளத்தில் தனது ரசிகர்களுடன் பகிர்ந்து கொண்ட நிகழ்ச்சியில் சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக இந்தியாவின் சச்சின், மே.தீவுகளின் லாராவை கணித்தார்.

இந்திய ஜாம்பவான் சச்சின், 200 டெஸ்ட் (15,921 ஓட்டங்கள்), 463 ஒருநாள் (18,426) போட்டிகளில் விளையாடினார். தவிர இவர், டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள், அதிக சதம் மற்றும் சர்வதேச அரங்கில் 'சதத்தில்' சதம் உட்பட நிறைய சாதனைகள் படைத்தார். மே.தீவுகளின் ஜாம்பவான் பிரையன் லாரா 131 டெஸ்ட் (11,953 ரன்), 299 ஒருநாள் (10,405) போட்டிகளில் விளை யாடினார்.

இதுகுறித்து வோர்ன் கூறுகை யில், "என்னுடைய கால கட்டத்தில் விளையாடிய வீரர்களில் சிறந்த பேட்ஸ்மேன்களாக இந்தியாவின் சச்சின், மே.தீவுகளின் லாரா முன்னிலை வகித்தனர்.

இவர்கள் இருவரில், அனைத்து சூழ் நிலையிலும் சிறப்பாக விளையாடக் கூடிய வர் சச்சின் மட்டும் தான். டெஸ்ட் போட்டியின் கடைசி நாளில் 400 ஓட் டங்களை 'சேஸ்' செய் யும் தகுதி லாரா வுக்கு மட் டுமே உள்ளது," என [illegible]றார்.




# மூச்சு முட்டியது நடை தள்ளாடியது

## டைபாலா கலக்கம்




"கொரோனா பாதித்த காலத்தில் மூச்சுவிட முடியவில்லை. ஐந்து நிமிடங்களுக்கு மேல் நடக்க முடியாமல் அவதிப்பட்டேன்,"என பாலோ டைபாலா தெரிவித்தார்.

ஆர்ஜென்ரீனா கால்பந்து வீரர் பாலோ டைபாலா, (வயது-26). தற்போது இத்தாலியின் யுவன்டஸ் கழக அணிக்காக விளையாடி வருகிறார். இவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது.

இதிலிருந்து மீண்ட இவர் கூறுகையில்,"திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டேன். பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியானது. அந்த காலக்கட்டத்தில் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. உடல் கனமாக இருந்தது. தசைகள் எல்லாம் வலித்தது. மிகவும் சோர்வாக உணர்ந்தேன். ஐந்து நிமிடங்கள் கூட நடக்க முடியவில்லை. மூச்சு விடுவதற்கு மிகவும் சிரமப்பட் டேன்.

தற்போது மீண்டு விட்டேன். நலமாக இருக்கிறேன். என்னால் வழக்கம் போல் நடக்க முடிகிறது. விரைவில் பயிற்சியை துவக்க உள்ளேன். எனது வருங்கால மனைவி ஒரியானாவும் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டது நல்ல விடயம்,"என்றார்.

# மனமோ இங்கே எண்ணமோ அங்கே

## என்ன சொல்கிறார் சூர்யகுமார்




ஊரடங்கு உத்தரவால் உடல் மட்டும் தான் வீட்டில் உள்ளது. உள்ளம் வான்கடே மைதானத்தில் இருக்கிறது," என, மும்பை கிரிக்கெட் வீரர் சூர்யகுமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மார்ச் 29ல் தொடங்க இருந்த 13வது ஐ.பி.எல்., சீசன் ஒத்திவைக் கப்பட்டது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இந் திய விளையாட்டு நட்சத் திரங் கள் வீட்டில் முடங்கி உள்ள னர்.

இதுகுறித்து ஐ.பி. எல்., தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வரும் சூர்யகுமார் யாதவ் 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தி யில்,

"ஊரடங்கு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளதால் எனது மனம் வான்கடே மைதானத்தை சுற்றி வருகிறது. உடல் மட்டும் தான் வீட்டில் உள்ளது. இதுவும் கடந்து போகும்,' என தெரிவித்திருந்தார்.

## கொரோனா தாக்கத்தின் எதிரொலி

# ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஒரு வருடம் காலம் தாழ்த்து



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தள்ளி வைக்கப்பட்டுள்ள 2020 ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி அடுத்த வருடம் ஜூலை 23ஆம் திகதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது. கடைசியாக 2016ஆம் ஆண்டு பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்றது.

இந்த ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் ஜூலை 24ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 9ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவி இருந்ததால் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் நலன் கருதி ஒலிம்பிக் போட்டி ஒரு ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றவர்கள் இதில் நேரடியாக பங்கேற்கலாம். இது வரை 57 சதவீதம் பேர் தகுதி பெற்று இருந்தனர்.

இந்த நிலையில் 2021ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை எந்த தேதியில் நடத்துவது என்பது குறித்து ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி அமைப்பாளர்கள் ஆலோசனை நடத்தினார்கள். அமைப்புக் குழு தலைவர் யோஷிரோ மோரி, டோக்கியோ கவர்னர் யூரிகோ கொய்க் ஆகியோர் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

வெப்பம் குறைவாக உள்ள நேரத்தில்தான் மாரத்தான் உள்ளிட்ட போட்டிகளை நடத்த முடியும் என்று கவர்னர் வலியுறுத்தினார்.

இதைத்தொடர்ந்து ஜூலை மாதமே போட்டியை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஜூலை மாதம் 23ஆம் திகதி ஒலிம்பிக் போட்டி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பாரா ஒலிம்பிக் ஆகஸ்ட் 24ஆம் திகதி முதல் செப்டம்பர் ஐந்தாம் திகதி வரை நடைபெற இருக்கிறது.

## - கொரோனா தடுப்பு நிதி -

# கம்பீர் கொடுத்தார் 1 கோடி

'கொரோனா வைரஸ்' தடுப்பு நிவாரண நிதிக்கு கம்பிர் ரூ, 1 கோடி வழங்கினார்.

இந்திய அணியின் முன்னாள் ஆரம்ப வீரர் கம்பிர், (வயது-38). கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின், பா.ஜ., சார்பில் கிழக்கு டில்லி தொகுதியின் எம்.பி., ஆக உள்ளார். 'கொரோனா வைரஸ்' தடுப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட தனது தொகுதி மக்களுக்கு 2,000 உணவுப் பொட்டலங்களை வழங்கினார். டில்லி அரசுமருத்துவமனையில்'கொரோனா' தடுப்பு உபகரணங் கள் வாங்க, தொகுதி நிதியிலிருந்து ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு செய்தார்.

தற்போது தனது எம்.பி., மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 1 கோடியை பிரதமரின் 'கொரோனா' தடுப்பு நிவாரண நிதிக்காக வழங்கியுள்ளார். இது குறித்து காம்பிர் கூறுகையில்,"நாட்டின் அனைத்து சக்திகளையும் 'கொரோனா'வுக்கு எதிரான போருக்கு பயன்படுத்த வேண்டிய நேரம் இது. எனது எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1 கோடி நிவாரண நிதியாக வழங் குகிறேன். எனது ஒரு மாத சம்பளத்தையும் மத்திய நிவாரண நிதிக்கு அளிக்கிறேன்," என்றார்.




இதேவேளை மத்திய விளை யாட்டுத் துறை அமைச்சர் கிரன் ரிஜ்ஜுவும் ரூ. 1 கோடி நிவாரண நிதியாக வழங் கியுள்ளார். இது குறித்து இவர் 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தி யில்,"பா.ஜ., எம்.பி.,க்கள் அனை வரும் 'கொரோனோ' தடுப்பு நிவா ரணத் திற்கு தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 1 கோடி வழங்க வேண்டுமென பிரதமர் மோடி அழைப்பு விடுத்திருந்தார். இதற்கு ஏற்ப ரூ. 1 கோடியை 'கொரோனா' வுக்கு எதிரான போருக்கான நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளேன், "என்றார்.

# தொழிலாளர்கள் வெளியேறுவதைத் தடுப்பதற்கு மாநில எல்லைகளுக்கு சீல் வைத்த பொலிஸார்





(டில்லி)

புலம்பெயர் தொழிலாளர்கள் வெளியேறுவதைத் தடுக்க மாநில எல்லைகளை மூடும்படி மத்திய அரசு உத்தரவிட்டது. இதனை யடுத்து எல்லைகள் மூடப்பட்டன.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 27 பேர் பலியாகினர். கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில் 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் பேருந்து, புகையிரத மற்றும் விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மாவட்ட எல்லைகள் மூடப்பட்டன.

ஆனால், பெரிய நகரங்களில் தங்கியிருந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் ஊரடங்கு காரணமாக வேலையிழந்ததால், தங்கள் சொந்த ஊருக்குப் புறப்பட்டுச் செல்லத் தயாரானார்கள். சிலர் தங்கள் குடும்பத்தினருடன் நெடுஞ்சாலைகள் வழியாக நடந்தே சொந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இதையடுத்து, புலம் பெயர் தொழிலாளர்களுக்கு உணவு, தங்குமிடம் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டது. எனினும் புலம் பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊருக்குப் புறப்பட்டனர். வேறு வழியில்லாமல் அவர்களுக்கு தேவையான வாகன வசதிகளையும் மாநில அரசுகள் செய்து கொடுத்தன.

புலம்பெயர் தொழிலாளர்கள் பெருமளவில் இடம்பெயர்வதால் நோய்த்தொற்று அதிகளவில் பரவும் அபாயம் இருந்தது. எனவே, ஊரடங்கின்போது வெளிமாநிலத் தொழிலாளர்கள் இடம்பெயர்வதைத் தடுப்பதற்காக, மாநில எல்லைகள் மற்றும் மாவட்ட எல்லைகளை மூடும்படி மத்திய அரசு உத்தரவிட்டது. தடையை மீறிச் செல்வோர் தனிமைப்படுத்தல் முகாம்களில் 14 நாள்கள் தங்க வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மாநில எல்லைகள், மாவட்ட எல்லைகள் மூடப்பட்டன. எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. மக்கள் வீடுகளிலேயே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். அத்துடன் தொழிலாளர்களுக்கு தற்காலிக தங்குமிடங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதால் நேபாளத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள இந்தியா - நேபாள எல்லையில் தவித்து வருகின்றனர். (இ)

# கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் மாலியில் நேற்று பாராளுமன்ற தேர்தல்



(பமாக்கோ)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் மாலியில் பாராளுமன்றத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப் பதிவு நேற்றுத் தொடங்கியது.


ஆபிரிக்க நாடான மாலியில் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடங்கம் தற்போது வரை உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதன் காரணமாக அங்கு பாராளு மன்றத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் நீடித்து வந்தது.

இந்நிலையில் நீண்ட இழுபறிக்குப் பிறகு மார் 29ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என அந்த நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதனிடையே உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் மாலி நாட்டிலும் நுழைந்தது. அந்த நாட்டில் 4 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கடந்த புதன்கிழமை உறுதி செய் யப்பட்டது.

நேற்று முன்தினம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்தார்.

இதன் காரணமாக தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப் படும் சூழல் உருவானது. எனினும் இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியிலும் திட்டமிட்டப்படி நேற்று தேர்தல் நடைபெற்றது. காலை 8 மணிக்கு வாக்கு பதிவு தொடங்கியது. (இ)

# கொரோனாவின் முடிவு நெருங்கிவிட்டது நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி கணிப்பு



(லொஸ்ஏஞ்சல்ஸ்)

கொரோனா வைரஸ் தொற்றின் முடிவு நெருங்கி விட்டது என்றும் தற்போதைய நிலைமை சிறப்பானதாக மாறிவிடும் என்றும் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி மைக்கேல் லெவிட் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் சீனாவின் ஹூபே மாகாணம் வுஹானில் பரவத்தொடங்கிய கொரோனா வைரஸ் தற்போது உலகின் 199இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியது.

இந்நிலையில், ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக உயிர் இயற்பியலாளரும், வேதியலுக்கான நோபல் பரிசு பெற்றவருமான மைக்கேல் லெவிட், சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், கொரோனா வைரஸ் தொற்றின் முடிவு நெருங்கி விட்டது. தற்போதைய நிலைமை சிறப்பானதாக மாறிவிடும் என நம்பிக்கை வெளியிட்டார்.

சமூக விலகல் இந்த நேரத்தில் தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு அவசியமான ஒரு சக்தியை உலகிற்கு அளித்துள்ளது.

ஏனெனில் சீனாவில் கொரோனா வைரஸ் பரவிய போது, சீனா குறித்து நிபுணர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருந்த போதிலும், மைக்கேல் லெவிட் துல்லியமான கணிப்புக்களை வெளியிட்டிருந்தார்.

சீனாவில் 80,000 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்படுவார்கள் மற்றும் 3,250 உயிரிழப்புக்கள் ஏற்படலாம் என்று மைக்கேல் லெவிட் மதிப்பிட்டி ருந்தார். சீனாவில் 3,277 உயிரிழப்புக்கள் ஏற்பட்டதுடன், 81,171 பேர் பாதிக்கப் பட்டிருந்தனர்.

அவரின் கூற்றின் படியே, சீனாவில் கொரோனா வைரஸ் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன், சீனாவில் கொரோனா வைரஸின் மையமாக இருந்த ஹூபே மாகாணம் நீண்ட நாட்களுக்குப் பின் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியது குறிப்பிடத்தக்கது. (இ)

# தனிமைப்படுத்தப்பட்ட மற்றுமொரு குழுவினர் நேற்று வெளியேறினர்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து கொரோனா தடுப்பு முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றுமொரு குழுவினர் நேற்றுக்காலை தங்களது வீடுகளுக்கு சென்றதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

132 பேர் கொண்ட குழுவினரே இவ்வாறு தங்களது வீடுகளுக்குத் திரும்பியதாக அவர் தெரிவித்தார்.

இவர்களுள் 76 பேர் தியத்தலாவ கொரோனா தடுப்பு முகாமிலிருந்தும் ஏனைய 56 பேரும் பூனானி கொரோனா தடுப்பு முகாமிலிருந்தும் வெளியேறிச் சென்றனர்.

அதனடிப்படையில் இதுவரையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 1565 பேர் தங்களது வீடுகளுக்குத் திரும்பியதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் 41 கொரோனா தடுப்பு முகாம்களில் 2096 பேர் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அவர்களில் 20 பேர் வெளிநாட்டுப் பிரஜைகள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்படாது

(கொழும்பு)

2020ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை 2019ஆம் ஆண்டு நடை பெற்று முடிந்த சாதா ரண தரப் பரீட்சை பெறு பேறுகள் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

# அமெரிக்காவில் இன்னும் 2 வாரங்களில் பலி எண்ணிக்கை உச்சத்தை எட்டும்!

## ட்ரம்ப் அதிர்ச்சித் தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் அடுத்த 2 வாரங்களில் பலி எண்ணிக்கை உச்சத்தை அடையலாம் என்று ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

உயிர்க்கொல்லி வைரஸான கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் உலக நாடுகள் திணறி வருகின்றன. சீனா, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், ஈரான் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து வல்லரசு நாடான அமெரிக்காவிலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் தான் அதிகம். இன்று காலை நிலவரப்படி அமெரிக்காவில் ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 70 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இவர்களில் 24 84 பேர் உயிரிழந்தனர். 4500 இற்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பினர்.

அமெரிக்காவில் நோய்த் தடுப்பு நடவடிக்கை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றபோதிலும், கடந்த சில தினங்களாக புதிய நோயாளிகளின் வருகை அதிகரித்தது. இறப்பு விகிதமும் பெருமளவில் உயர்ந்து வருகிறது. அடுத்த இரண்டு வாரங்களில் வைரஸ் தாக்கம் மற்றும் உயிரிழப்பு உச்சத்தை அடையலாம் என ஜனாதிபதி ட்ரம்ப் கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக ட்ரம்ப் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், 'கொரோனா வைரஸ் பாதிப்பால் அமெரிக்காவில் அடுத்த இரு வாரங்களில் பலி எண்ணிக்கை உச்சக்கட்டத்தை எட்டும். உயிரிழப்பை ஒரு இலட்சத்திற்குள் கட்டுப்படுத்தினாலே பெரிய விடயம். வைரஸ் பரவலைத் தடுக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும். சமூக விலகல் உத்தரவு மேலும் ஒரு மாதத்திற்கு அதாவது, ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீட்டிக்கப்படுகிறது. ஜூன் முதலாம் திகதிக்கு மேல் விடிவு பிறக்கும் என நம்பிக்கை வெளியிட்டார்.



கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் போதுமான அளவு மேற்கொள்ளப்படவில்லை என்றால் பலி எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டும் என்று ஜனாதிபதியிடம் பொதுச் சுகாதார நிபுணர்கள் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனா பீதியில் உலகநாடுகள்; வடகொரியா ஏவுகணைச் சோதனை



(சியோல்)

உலக நாடுகள் கொரோனா பீதியில் உறைந்திருக்கும் நிலையில் வடகொரியா ஏவுகணைச் சோதனை நடத்தியது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முடியாமல் உலக நாடுகள் திணறி வருகின்றன. நாள்தோறும் உயிரிழப்புக்களும், பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

ஆனால் வடகொரியா எந்தவித பதற்றமும் இல்லாமல் தொடர்ந்து, ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறது. வடகொரியாவின் அண்டை நாடான தென் கொரியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகமாகவுள்ளது.

அங்கு இதுவரை 150 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியது. ஆனால் வடகொரியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளதா என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை. வடகொரியா அரசும் இதுவரை கொரோனா வைரஸ் பாதிப்பு குறித்து எந்த அதிகாரபூர்வ தகவலும் வெளியிடவில்லை.

இது சர்வதேச அளவில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியது. எனினும் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கிய உடனேயே தனது எல்லைகள் அனைத்தையும் வடகொரியா மூடுவதாக அறிவித்தது.

அதே சமயம் உலக நாடுகள் கொரோனாவுக்கு எதிராகப் போராடி வரும் நிலையில் எந்தவிதமான பதற்றமும் இன்றி ஏவுகணைகளைச் சோதித்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாக வடகொரியா நேற்று முன்தினம் 2 குறுகிய தூர ஏவுகணைகளை ஏவி சோதித்ததாக தென்கொரிய இராணுவம் தெரிவித்தது.

இதுகுறித்து தென் கொரிய இராணுவ படைப்பிரிவின் துணைத்தலைவர் கூறுகையில், "வடகொரியாவின் வோன்சான் கடற்கரையில் இருந்து, குறுகிய தூரம் சென்று தாக்கும் 2 ஏவுகணைகள் ஏவப்பட்டன. இந்த ஏவுகணைகள் 230 கி.மீ தொலைவுக்கு 30 கி.மீ உயரத்தில் சென்றது. உலக நாடுகள், கொரோனா வைரஸால் மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டு வரும் சூழலில், வடகொரியாவின் இந்த நடவடிக்கை முற்றிலும் பொருத்தமற்றதாக உள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஜப்பான் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், "வடகொரியா குறுகிய தூரம் சென்று தாக்குதல் நடத்தும் திறன் கொண்ட ஏவுகணைகளை பரிசோதனை செய்தது. ஆனால், அந்த ஏவுகணை ஜப்பான் எல்லைக்குள் வரவில்லை. இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து வடகொரியா பரிசோதனை செய்யும் 9 ஆவது ஏவுகணை இதுவாகும். வடகொரிய அரசு தொடர்ந்து இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இவை அனைத்தும் அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜான் உன்னின் மேற்பார்வையிலேயே நடந்தது" எனத் தெரிவிக்கப்பட்டது.(இ)

## நாள்தோறும் 200 பேருடன் உரையாடும் பிரதமர் மோடி



(டில்லி)

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நாள்தோறும் 200 பேருடன் மோடி தொலைபேசியில் பேசி தகவல் கேட்டு வருவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் பிரதமர் மோடி தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அதற்கான பலன்கள் குறித்து அவர் நாள்தோறும் 200 பேருடன் தொலைபேசியில் பேசி தகவல் கேட்டு வருவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

மாநில ஆளுநர்கள், முதலமைச்சர், மாநில சுகாதார அமைச்சர்கள் ஆகியோருடன் அவர் உரையாடி வருகிறார். வைத்தியர்கள், தாதிகள், சுகாதாரப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோருடனும் பேசி, அவர்களது சேவையையும் பாராட்டி வருவதாக பிரதமர் அலுவலகம் சுட்டிக்காட்டியது.

மேலும், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள், குணமடைந்தவர்கள் ஆகியோருடனும் பேசி வருகிறார்.

அத்துடன், நாள்தோறும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி வருவதாகவும், அமைச்சரவை செயலாளர், பிரதமரின் முதன்மைச் செயலாளர் ஆகியோருடன் தனித் தனியாக கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கேட்டு வருவதாகவும் பிரதமர் அலுவலகம் மேலும் தெரிவித்தது. (இ)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

(சாவகச்சேரி)


தற்போதைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மாதாந்தக் கிளினிக்கில் சேவை பெறும் நோயாளிகளின் விசேட நன்மை கருதி தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

021 227 0932 மற்றும் 021 227 1150 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேற்படி வைத்தியசாலையின் மாதாந்தக் கிளினிக் தொடர்பான ஆலோசனைகள், மருந்து வழங்கல் என்பன தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமென சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் திருமதி- தயாளினி மகேந்திரன் குறிப்பிட்டுள்ளார். (இ-03,18,30,114)

## ஊரடங்கு தளர்த்தப்பட்ட போது மன்னார்







# கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கூறும் நாடுகள்?

## தொற்று நோய் பரவல் கணித பகுப்பாய்வு வல்லுநர் குச்சார்ஸ்கி சந்தேகம்

(லண்டன்)

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் உலக நாடுகள் 20 சதவீதத்துக்கும் குறைவான அளவையே வெளியுலகுக்கு வெளிப்படுத்துகின்றன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியானது.

கண்ணுக்குத் தெரியாத இந்த கொரோனா வைரஸ் பிடியில் இருந்து எப்படித்தான் நாம் மீளப்போகின்றோம், உயிர் வாழப்போகின்றோம் என்று ஒரு வழி தெரியாமல் உலகமே கதிகலங்கிக் கொண்டிருக்கிறது.

ஆளுக்கு ஒரு கணக்கு, ஆளுக்கு ஒரு விஞ்ஞானம், ஆளுக்கு ஒரு மருத்துவம் என்று ஊடகங்களில் அள்ளித்தெளிக்கிறார்கள். எதைப் படிப்பது, எதை விடுவது, எதை நம்புவது எனத் தெரியாமல் மக்கள் கூட்டம் திணறித்தான் போகிறது.

உலகமெங்கும் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஆளானோரின் எண்ணிக்கை 7 இலட்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. வைரஸ் தொற்றால் பலியானவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் தாண்டியது. இதிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 50 ஆயிரத்தை எட்டியது என அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக தகவல் மையம் கணக்கு கூறுகிறது.

ஆனால், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் உலக நாடுகள் 20 சதவீதத்துக்கும் குறைவான அளவையே வெளியுலகுக்கு கூறுகின்றன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியது.

இது தொடர்பாக தொற்றுநோய் பரவல் கணித பகுப்பாய்வில் வல்லுநராக திகழக்கூடிய ஆடம் குச்சார்ஸ்கி தெரிவிக்கையில்,

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மலேரியா காய்ச்சல், நுளம்புகள் மூலம்தான் பரவுகின்றன என்று கண்டுபிடித்தவர் நோபல் பரிசு பெற்ற பிரிட்டன் மருத்துவ விஞ்ஞானி ரொனால்டு ரோஸ்.

அவர் தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவது பற்றிய ஒரு பார்வையைத் தந்துள்ளார். கடைசி நுளம்பு இருக்கிற வரையில் மலேரியா காய்ச்சலை ஒழித்துக்கட்ட முடியாது என்பது தான் மனிதர்களின் எண்ணமாக இருந்தது.

ஆனால் ஒவ்வொரு நுளம்பையும் ஒழிக்கத்தேவையில்லை என்பதுதான் ரொனால்டு ரோஸ் பார்வையாக இருந்தது.

நுளம்புகளின் அடர்த்தியை ஓரளவுக்கு குறைத்து விட்டாலே மலேரியா காய்ச்சலால் பாதித்த ஒருவர் அதை மற்றவர்களுக்கு பரப்புவதற்கு முன்பாகவே குணமடைந்து விட வாய்ப்பு உண்டு.

கொரோனா வைரஸ் பிரச்சினையிலும் கூட இதே போன்றதொரு யோசனையை நாம் சிந்திக்க முடியும். உடல் அளவில் தனித்திருத்தல் அல்லது சமூக அளவில் விலகியிருத்தல் என்ற யோசனை வந்திருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று பாதித்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆனால், இந்த நடைமுறைகள் அமுலில் இருப்பதால் அவர்கள் அதை மற்றவர்களுக்குப் பரப்புவதற்கு முன்பாக கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து மீண்டு விட முடியும். அதைத்தான் நாம் வுஹான் போன்ற இடங்களில் பார்த்தோம்.

தொற்றுநோய் பரவல் கணிதத்தைப் பொறுத்தமட்டில், ஸ்பானிஷ் புளூ, சார்ஸ் அல்லது எபோலா போன்ற வைரஸில் இருந்து கொரோனா வைரஸ் எப்படி மாறுபட்டிருக்கிறது என்றால்,


இந்த நோய் தொற்றுக்களைப் பற்றி புரிந்துகொள்வதற்கென்றே பல பரந்த கொள்கைகள் இருக்கின்றன. இவை பல நோய் கிருமிகளுக்கு பொருந்தக்கூடும். குறிப்பாக கூறுவது என்றால் பரவலின் அளவைப் புரிந்துகொள்வதில். ஆக, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும், சராசரியாக இந்த வைரஸை எத்தனை பேருக்கு கொடுக்கிறார்கள் என்ற கேள்வி எழும். 2 அல்லது 3 நபர்களுக்கு அவர்களால் கொடுக்க முடியும். நேர அளவீடுகளைப்பற்றியும் இங்கே நாம் சிந்திக்க வேண்டியதிருக்கிறது.

வந்து விட முடியும், ஏனென்றால் அதிக தொற்றால் ஒருவர் பாதிக்கப்பட்டபோது, அவற்றுக்கென்று தனித்துவமான அறிகுறிகள் இருக்கின்றன. அவர்களை நீங்கள் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியும். அவர்கள் யாருடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை பார்க்க இயலும். அவர்கள் தனிமைப்படுத்தப்படுவதை உறுதி செய்து விடவும் முடியும்.

ஆனால், இந்தக் கொரோனா வைரஸை பொறுத்தமட்டில், ஒருவர் பாதிப்புக்கு ஆளானாலும், அவர் நன்றாக இருக்கிறபோது கூட அல்லது லேசாக இருக்கும் போதும் நிறைய பேருக்குப் பரவி விடுகிறது.







ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருக்கிறபோது, அதற்கான அறிகுறிகளை அவர் காண்பிக்க சராசரியாக எத்தனை நாட்கள் ஆகியிருக்கும் என்றால் 5 நாட்களாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்கலாம்.

மற்ற வைரஸ்களுடன் ஒப்பிடுகையில் கொரோனா வைரஸ் முன் உள்ள மிகப்பெரிய சவால் என்னவென்றால், அது தொற்றின் ஆரம்பத்திலேயே, அதாவது அறிகுறிகள் தென்படுவதற்கு முன்பாகவே அல்லது லேசான அறிகுறிகள் தென்படுகிறபோதே நிறைய பேருக்கு பரவி விடுகிறது என்பது தான்.

எபோலா, சார்ஸ் வைரஸ்களைப் பொறுத்தமட்டில், அவற்றை எளிதில் கட்டுக்குள் கொண்டு

இதனால் யார், யாருக்கு இந்த வைரஸ் பரவி இருக்கிறது என்பதை அடையாளம் காண்பது மிகக் கடினமானதாகி விடுகிறது. வெளிநாடுகளில் எல்லாம் இதைத்தான் பார்த்தோம். ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கு முன்பாகவே பலருக்குப் பரவினாலும் அவர்கள் கண்டறியப்படாமல் போகிறார்கள்.

இந்தியாவில் குறைவான பேருக்குத்தான் இந்தக் கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஒப்பிட்டால் மரண விகிதாசாரமும் குறைவாகவே இருக்கிறது.

ஆனால் இந்தியாவின் மக்கள் தொகை மற்றும் நகரங்களில் மக்கள் அடர்த்தியைப் பார்க்கிறபோது, இந்த எண்ணிக்கை சந்தேகத்தை ஏற்படுத்துகிறதா? என்றால், ஆரம்ப நிலையில் இரண்டு அம்சங்களைக் கண்டறிவது கடினம்.

குறைவான எண்ணிக்கையில் பாதிப்புக்கு ஆளானவர்களை கொண்டிருக்கிறபோது, தற்செயலாகவோ அல்லது மக்கள் தொகை அமைப்பினாலோ அல்லது பிற அம்சங்களாலோ, இன்னும் பரவுவது அதிகரிக்கவில்லை.

இன்னும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் பாதிக்கப்படுகிறபோது, குறிப்பாக உயிர்ப்பலி எண்ணிக்கை அதிகரிக்கிறபோது, எந்தளவுக்கு கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றிய தெளிவான நிலையைக் காண முடியும்.

அண்மையில் நாங்கள் சில மதிப்பீடுகளை செய்திருக்கின்றோம். கொரோனா வைரஸ் பாதித்துள்ள பல நாடுகளில், பாதிப்புக்குள்ளானவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 20 சதவீதத்துக்கும் குறைவாகவே வெளியுலகுக்கு வெளிப்படுத்தப்படுகிறது என்று நினைக்கின்றோம். கொரோனா வைரஸ் பரவலில் தவறான தகவல்களும் பரவுகின்றன.

கொரோனா வைரஸை பொறுத்தமட்டில் ஆரம்ப கட்டத்தில், பாதிப்புக்கு ஆளாகிற ஒவ்வொருவரும், ஒரு சிலருக்கு அதைப் பரப்புகிறார்கள்.

கொரோனா வைரஸ் போன்ற கொடிய தொற்று நோய் பரவுவதற்கும், இது பற்றிய போலியான தகவல்கள் பரவுவதற்கும் ஒற்றுமை இருக்கிறதா? என்ற கேள்வி எழலாம்.

இதையொட்டி, பேஸ்புக் உள்ளடக்கம் பற்றிய ஒரு ஆய்வில், கொரோனா வைரஸ் பற்றிய ஒரு பதிவை ஒருவர் வெளியிடுகிறபோது, மேலும் 2 பேர் அதை பகிர வாய்ப்பு இருக்கிறது என்பது தெரிய வந்தது. ஆனால் பெரிய வித்தியாசம், நேர அளவுதான்.

கொரோனா வைரஸ் பரவுவதற்கு சில நாட்கள் ஆகும். அதே சமயம், வலைத்தளங்களில் 30 விநாடிகளில் பேசத்தொடங்கி விடலாம். அது கொத்துக் கொத்தாக பரவத்தொடங்கி விடுகிறது என அந்த வல்லுநர் மேலும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் என்ற ஆக்டோபஸ்சின் கரங்கள் இன்னும் முழுமையாக நீளாமலேயே ஒடுங்கிப்போய் விட வேண்டும் என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

உலகமெங்கும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 சதவீதத்துக்கும் குறைவாகத்தான் வெளியே வருகிறது என்றால் ஐந்தில் ஒருவர் பற்றிய தகவல்களே வெளிவருகின்றன என்று அர்த்தம். இது உண்மையானால் இன்னும் இந்தக் கொரோனா வைரஸின் வலிமை அதிகம் என்பது தெளிவாகிறது.

ஒவ்வொருவரும் மத்திய, மாநில அரசுகளின் விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை மதித்தும், தங்களுக்குத் தாங்களே சுய கட்டுப்பாடுகளை விதித்தும் வீடுகளுக்குள்ளும், இருக்கும் இடங்களிலும் முடங்கி இருப்பதுதான் ஒவ்வொருவரையும் காக்கும். உயிரையும் காக்கும்! என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கொரோனாவுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம்

## போப்பாண்டவர் அறிவுறுத்தல்

(வத்திக்கான்)

உலக நாடுகள் உள்நாட்டுப் போரை நிறுத்திவிட்டு கொரோனாவுக்கு எதிராகப் போராட வேண்டுமென போப்பாண்டவர் அறிவுறுத்தினார்.

சீனாவில் உருவான உயிர்க்கொல்லி கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் 199 நாடுகளில் பரவி ஆட்டிப்படைத்து வருகிறது. ஏற்கனவே உள்நாட்டுப் போரால்



சிதைந்துள்ள ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா போன்ற நாடுகளையும் கொரோனா விட்டு வைக்கவில்லை.

எனவே இந்த இக்கட்டான சூழ்நிலையில் உள்நாட்டுப் போரை நிறுத்தி விட்டு கொரோனா வைரஸை ஒழிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் செயலாளரின் அழைப்புக்கு ஆதரவு தெரிவித்த போப்பாண்டவர் பிரான்சிஸ், உள்நாட்டுப் போரை நிறுத்திவிட்டு கொரோனாவுக்கு எதிராகப் போராட வேண்டுமென அறிவுறுத்தினார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுடன் என் எண்ணங்கள் உள்ளன. கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான ஒரு உலகளாவிய போரில் நாம் ஒன்றிணைந்து கவனம் செலுத்த வேண்டும்.

இதற்கு உள் நாட்டுப் போரை நிறுத்த வேண்டியது அவசியம் எனக் கூறினார். (இ)

# வறிய குடும்பங்களின் வாழ்விற்கு ஆலயங்கள் உதவ வேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் அவசர கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கோயில்களில் திருவிழாக்கள் செய்ய இருந்தஉபயகாரர்கள், வணக்கஸ்தலங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் அறநிலையக் காப்பாளர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இன்று பட்டினியால் வாடும் பலவறிய குடும்பங்களுக்கு ஓரிரு வாரங்களுக்கேனும் பாவிக்கக்கூடியஉலர் உணவுப் பொதிகளை சமய காரணங்களுக்காக வைத்திருந்த தமது நிதியைப் பாவித்து வாங்கிக் கொடுக்க முன் வரவேண்டும் என்று ஆயிரம் பிறை கண்ட எனது வயதை மட்டுமே எனக்கிருக்குந் தகைமையாக முன்வைத்து அனைத்து அன்புள்ளங்களிடமும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன் என வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

இன்று வணக்கஸ்தலங்களில் நடைபெறவேண்டிய வருடாந்த திருவிழாக்கள்,பூஜைகள், ஆராதனைகள், வழிபாடுகள் அனைத்தும் கொரோனாவின் நிமித்தம் ஸ்தம்பிதமாகியுள்ளன. யார் யாரை இந்தவைரஸ் அடுத்துத் தாக்கும் என்பது கேள்விக் குறியாக உள்ளது. சமயச் சடங்குகளுக்காகப் பாவிக்கவிருந்தநிதியனைத்தும் செலவுசெய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

அதேநேரம் நாளாந்தம் கிடைக்கும் வருமானத்தில் தமது குடும்பங்களைப் பராமரிக்க வேண்டிய குடும்பத் தலைவர்கள்,தலைவிகள் வீட்டுக்கு வெளியே செல்ல முடியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர். பலருக்குதத் தமது ஊர்களில் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடுஏற்பட்டுள்ளது. பலகுடும்பங்கள் அடுத்த வேளை சாப்பாடு எங்கிருந்து கிடைக்கும் என்று ஏங்கிக் கிடக்கின்றனர்.பலர் பட்டினியின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுதத்தளித்துவருகின்றனர்.

இந்தகாலகட்டத்துக்குத்தான் "மக்கள் சேவைமகேஸ்வரன் சேவை" என்ற முதுமொழி முற்றும் பொருந்துகின்றது. கோயில்களில் திருவிழாக்கள் செய்ய இருந்த உபயகாரர்கள், வணக்கஸ்தலங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் அறநிலையக் காப்பாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இன்றுபட்டினியால் வாடும் பல வறிய குடும்பங்களுக்கு ஓரிரு வாரங்களுக்கேனும் பாவிக்கக் கூடிய உலர் உணவுப் பொதிகளை சமயகாரணங்களுக்காக வைத்திருந்த தமது நிதியைப் பாவித்து வாங்கிக் கொடுக்க முன் வர வேண்டும் என்றுஆயிரம் பிறை கண்ட எனது வயதை மட்டுமே எனக்கிருக்குந்தகைமையாக முன் வைத்து அனைத்து அன்புள்ளங்களிடமும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறான ஒரு செயல்பாட்டை சிறப்பாகமுன் நடத்த ஊடகங்கள் முன் வரலாம் என்று கருதுகின்றேன். தேவையுடையோரை அவர்கள் அடையாளப்படுத்திக் கொடுக்கலாம்.

தயவுசெய்துஎமதுதமிழ் மக்கள் இந்தகைங்கரியத்திலாவதுதங்கள் முரண்பாடுகளை முன்வைக்காது முனைந்துவந்துஉதவிய ளிக்க முன்வரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் சமூக இடைவெளி தேவை

## இராணுவத்தளபதி வலிறுத்து

(கொழும்பு)

ஊரடங்கு தளர்த்தப்படும் தருணங்களில் அனைவரும் சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டிற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, கண்டி, களுத்துறை, புத்தளம் ஆகிய ஆறு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்றையதினம் ஊரடங்கு ஆறு மணிநேரம் தளர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஊரடங்கு தளர்த்தப்பட்ட பிரதேசங்களில் பொது மக்கள் கொரோனா பரவலைக்கட்டுப்படுத்துவதற்கான உலக சுகாதார நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒரு மீற்றருக்கும் அதிகமாக இடைவெளியை ஒருவரிடத்திலிருந்து பிறிதொருவர் பேணுவது அவசியமாகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.



அத்துடன் எமக்கு வெளிப்படையாக தெரியாது விட்டாலும் சமூகத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் அடையா ளப்படுத்தப்படாதிருப்பதானது குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (இ-3)

# இலங்கைக்கு வருகை தந்தவர்களின் விபரங்கள் முழுமையாக சேகரிப்பு

(கொழும்பு)

மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்தவர்கள் தொடர்பான விபரங்கள் முழுமையாக சேகரிக்கப்படுவதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

இந்த அறிவுரையை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி தனிமைப்படுத்தல் சட்டமூலத்திற்கு இணங்க, இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்கு விசேட அவசர இலக்கமாக 1933 அறிமுகப்படுத்தப்பட்டது என்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறினார்.

ஊரடங்குச்சட்ட கால கட்டத்தில் பயணிப்பதற்கு அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவது அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக மட்டுமே ஆகும். இவ்வாறு வழங்கப்படும் ஊரடங்குச்சட்ட அனுமதிப்பத்திரங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (இ)

# ஊரடங்கு தளர்வின் போது முல்லைத்தீவு









# தொடர்ந்து பேரழிவை ஏற்படுத்தும் கொரோனா பலி எண்ணிக்கை 37 ஆயிரத்தை நெருங்கியது

**(ஜெனிவா)**

**கொடிய கொரோனா வைரஸால் பலியானோரின் எண்ணிக்கை 37 ஆயிரத்தை நெருங்கியது. நேற்றைய நிலைவரப்படி, உலகம் முழுவதும் இதுவரை 7 இலட்சத்து 70 ஆயிரத்து 293 பேருக்கு வைரஸ் பரவியது கண்டறியப்பட்டது.**

| நாடு | பலி | பாதிப்பு |
|---|---|---|
| இத்தாலி | 11591 | 101739 |
| சீனா | 3304 | 81470 |
| ஸ்பெயின் | 7340 | 85195 |
| ஈரான் | 2757 | 41495 |
| பிரான்ஸ் | 3024 | 44550 |
| அமெரிக்கா | 2870 | 156690 |
| ஜப்பான் | 54 | 1866 |
| இங்கிலாந்து | 1408 | 22141 |
| இந்தியா | 29 | 1071 |
| ஜேர்மனி | 560 | 63929 |
| சுவிஸ்சர்லாந்து | 348 | 15760 |
| நெதர்லாந்து | 864 | 11750 |
| பெல்ஜியம் | 513 | 11899 |
| பிரேசில் | 141 | 4371 |
| கிரீஸ் | 43 | 1212 |
| இந்தோனேசியா | 122 | 1414 |
| பிலிப்பைன்ஸ் | 78 | 1546 |
| ஈராக் | 46 | 630 |
| சான் மரினோ | 25 | 230 |
| அல்ஜீரியா | 35 | 584 |
| அவுஸ்திரேலியா | 18 | 4245 |
| கனடா | 67 | 7297 |
| நோர்வே | 32 | 4445 |
| கங்ஹேரி | 15 | 447 |
| டென்மார்க் | 77 | 2577 |
| மலேசியா | 37 | 2626 |
| பாகிஸ்தான் | 21 | 1690 |
| தாய்லாந்து | 09 | 1524 |
| சிங்கப்பூர் | 03 | 879 |
| பங்களாதேஷ் | 05 | 49 |



உயிர்க்கொல்லி வைரஸான கொரோனா வைரஸை ஒழிக்க முடியாமல் உலக நாடுகள் சிக்கித் திணறி வருகின்றன. உலகின் 199 நாடுகளில் கொரோனா வைரஸ் பரவி மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

தடுப்பு மருந்துகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், இந்த வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

கொரோனாவால் இத்தாலியில் தான் அதிக உயிரிழப்பு ஏற்பட்டது. இதுவரை இத்தாலியில் 11 ஆயிரத்து 591 பேர் பலியாகினர். அதற்கு அடுத்த இடங்களில் ஸ்பெயின் (7340 பலி), சீனா (3304 பலி) ஆகிய நாடுகள் உள்ளன. அமெரிக்காவில் 2870 பேரும், பிரான்ஸில் 3024 பேரும், ஈரானில் 2757 பேரும், பிரிட்டனில் 1408 பேரும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## அநுராதபுரம், பேருவளை மக்களுக்கு கடும் சட்டம்

(கொழும்பு)

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டாலும் பதுளை மாவட்டத்தின் வெலிமடை, பண்டாரவளை, அப்புத்தளை மற்றும் தியத்தலாவ ஆகிய இடங்களிலுள்ள அனைத்துக் கடைகளையும் மூடுவதற்கு தீர்மானித்ததாக பண்டாரவளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அத்துல டி சில்வா தெரிவித்தார்.

பண்டாரவளை நகரில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர் கடந்த 18 ஆம் திகதி தியத்தலாவ வைத்திய சாலைக்கு சென்று அங்கு பல மணித்தியாலங்களை கழித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்த வேளையில் அவர் வைத்தியசாலையின் மருந்து கொடுக்கும் இடத்தில் பல மணித்தியாலங்கள் இருந்தமை கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அவர்களுடன் இருந்தவர்களை பண்டாரவளை பொலிஸார் அழைத்தனர்.

80 பேர் வரையில் வைத்தியசாலையில் இருந்த போதும் 9 பேர் மாத்திரமே பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்ததாக பண்டாரவளை பொலிஸ் நிலையத்தின் அதிகாரி அத்துல டி சில்வா தெரிவித்தார்.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் குறித்த காலத்தில் அத்தியாவசிய பொருட்களை மக்களின் வீடுகளுக்கே சென்று வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் அரச மற்றும் தனியார் வணிக வங்கிகள் திறக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் அநுராதபுரம் மாவட்டத்தில் கலேன் பிந்துனுவெல, கஹாடகஸ்திகிலிய மற்றும் ஹொரவ பொத்தான ஆகிய நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

கண்டி, அக்குரணை பகுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர் மேற் குறிப்பிட்ட இடங்களுக்கு சென்றுள்ளமை கண்டறியப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை பேருவளை பன்னில பகுதியில் ஒரு கொரோனா நோயாளி இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து அந்த கிராம வாசிகளுக்கு வீட்டைவிட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டது.

அதேபோன்று அந்தக் கிராமத்திற்குள் நுழைவதற்கு எவருக்கும் அனுமதியில்லை என பேருவளை பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## கிருமித் தொற்று நீக்கும் பணி யாழில் தொடர்ந்தும் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக, நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும், பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களில், சிறப்பு அதிரடிப் படையினரின் கொழும்பிலிருந்து வருகை தந்த அணியினர், பொலிஸார் உள்ளிட்டோர் இந்தப் பணியை முன்னெடுத்து வருகின்றனர்.

கோரோனா வைரஸ் தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் கூடும் இடங்களில் கிருமித்தொற்று நீக்கி விசிறப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (இ-03,101)